மில்க்வைற் செய்தி
Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ மாசி 1984 ★ இதழ் 98


# தோட்டக்காணி நாட்டுக்கணிகலம்

வீட்டுக்கு அணிகலம் பசு. நாட்டுக்கு அணி தோட்டம் என்று நாம் புனைந்து சொன்னால் பலரும் இதை ஏற்றுக்கொள்வார்கள். பலருக்கு வீட்டோடு தோட்டக்காணி அமைந்துள்ளது. இது பெரிய வாய்ப்பும் வரப்பிரசாதமுமாகும்.

விஞ்ஞான அபிவிருத்தியோடு விவசாய அபிவிருத்தியும் கைகோர்த்து அணி நடை நடக்கும் வேளையில், எங்கள் வரண்ட நிலமெங்கும் முன்னரிலும் பார்க்க மேலதிக விளைவுண்டாவதோடு, புதிய பயிர்கள் பல நாம் வியப்படையும் வகையில் உண்டாகிப் பயன் தருகின்றன.

இன்னும் பருவகாலந்தோறும் விலைப் பயிர், உணவுப் பயிர் என்பன வித விதமாகச் சுற்றுவட்டமாக உண்டாகி நிலத்துக்குமேலும் வளந்தருவதோடு, எமக்கு வருவாயும் தருகின்றன. வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, கத்தரி, வெண்டி, தக்காளி என்பனவோடு கறட், கோவா, பீட் முதலியனவும் பயன் தருகின்றன.

தோட்டநிலம் பொன்கொழிக்கும் சொர்ணபூமி. வேலி வரம்புகளிலும் விதம் விதமான பயிர்கள் தரும் நிலத்தில் விசாலமான வீடுகள் அமைத்தல் புத்திசாலித்தனமாகாது. ஒடுங்கிய அமைப்பில் உயர்ந்த மாடி வீடமைத்து நிலப்பரப்பை மிச்சம்பிடித்தல் விவேகமாகும். நாட்டுப்புறமெங்கும் தோட்டங்களும் குளங்களும் மறைந்துவருதல் நன்றன்று.



மில்க்வைற் தொழிலதிபர் இ. போ. ச. வண்டிகளில் திருக்குறள் பலகை பொருத்துமாறு உபகரித்தபோது, வடபிராந்திய தலைவர் திரு. கனகரத்தினம் அவர்கள் வரவேற்றல்.

★ உழைப்பு உடலை உறுதிப்படுத்துகிறது ★

உ
சிவமயம்






## கடவுள் வணக்கம்

### திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்
திருக்கற்குடி — திருத்தாண்டகம்
திருச்சிற்றம்பலம்

மூத்தவனே வானவர்க்கு மூவா மேனி
முதலவனைத் திருவரையின் மூக்கப்
[பாம்பொன்
ருர்த்தவனே அக்கரவ மாரமாக
அணிந்தவனைப் பணிந்தடியா ரடைந்த
[அன்போ
டேத்தவனை யிறுவரையில் தேனை ஏனோர்க்
கின்னமுத மளித்தவனை யிடரை யெல்லாங்
காத்தவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணுரக் கண்டேன்
[நானே.

திருச்சிற்றம்பலம்

எல்லார்க்கும் எல்லாவற்றுக்கும் முற்பட்டவனே, வானவர்க்கும் மூத்தவனே, மூப்படையாத முதல்வனே, திருவரையிலே பாம்புக்கச்சு அணிந்தவனே, எலும்பு மாலையையும் பாம்பையும் ஆபரணமாக அணிந்தவனே, அடியார்கள் அன்போடு பணிதற்குக் காரணமாயிருப்பவனே, அடியாரால் போற்றப்படுபவனே, பெரிய மலையில் உள்ள தேன் போன்றவனே, எல்லோர்க்கும் அமுதம் அளித்தருளியவனே, அடியவர்க்கு உண்டாகும் துன்பங்களையெல்லாம் நீக்கியருளுபவனே, திருக்கற்குடியென்னும் திருத்தலத்திலே எழுந்தருளியுள்ள பெரியவனே, கற்பகமாய் வேண்டுவனவற்றைத் தந்தருளுபவனைக் கண்ணுர அடியேன் கண்டுகொண்டேனே.

## சோயா உணவு

சோயா விதைகளை நன்ருக ஊறவிட்டுத் தோல் நீக்கி உட்பருப்பைக் காயவைத்து மெல்லிய சூடாக்கி, மாவாக்கி வறுத்தமாவுடன் கலந்து இடியப்பம், பிட்டு, உரொட்டி பற்றிஸ் என்ன வேனும் செய்து குழந்தைகளைப் பலசாலிகளாக வளருங்கள். சோயா சொகுசான உணவு. சோக்கான உணவு. கோப்பிக்குப் பதில் சோயா மலிவு உறுதி;

## வாய்மை

உண்மை பேசுதல்.

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை.

ஒருவன் தன் மனத்துக்கு மாறுபடாமல் உண்மையைச் சொல்லுவானுயின், அவன் தானம், தவம் என்பனவற்றைச் செய்தவரிலும் பார்க்கப் பெருஞ் சிறப்புடையவனுவன்;

### Truthfulness

He who tells the truth with all his heart is greater than they who perform penance and do acts of charity.

## 1984 பெப்ருவரி மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | புதன் | — | அமாவாசை விரதம் |
| 4. | சனி | — | அப்பூதியடிகள் குருபூசை<br>இலங்கை சுதந்திர தினம் |
| 7. | செவ்வாய் | — | முன்னேஸ்வரம் கொடி |
| 9. | வியாழன் | — | மாலை 5-03 அட்டமி |
| 10. | வெள்ளி | — | அட்டமி நவமி<br>கார்த்திகை விரதம் |
| 11. | சனி | — | நவமி பிற்பகல் 4-58 வரை |
| 12. | ஞாயிறு | — | கண்ணப்பநாயனுர் குருபூசை |
| 13. | திங்கள் | — | தமிழ் மாசி மாதப் பிறப்பு<br>ஏகாதசி விரதம் |
| 14. | செவ்வாய் | — | பிரதோஷ விரதம் |
| 15. | புதன் | — | நடேசர் அபிடேகம் |
| 16. | வியாழன் | — | பூரணை விரதம்<br>நகுலேஸ்வரர் கொடி |
| 17. | வெள்ளி | — | மாசி மகம்<br>மாத்தளை மாரியம்மன் தேர் |
| 19. | ஞாயிறு | — | திருவள்ளுவர் குருபூசை |
| 23. | வியாழன் | — | பிற்பகல் 5-29 அட்டமி |
| 24. | வெள்ளி | — | அட்டமி நவமி |
| 25. | சனி | — | பிற்பகல் 4-29 வரை நவமி |
| 27. | திங்கள் | — | ஏகாதசி விரதம் |
| 29. | புதன் | — | பிரதோஷ விரதம்<br>நகுலேஸ்வரர் தேர்<br>சிவராத்திரி |

★ தூய எண்ணம் உள்ளத்தை உறுதிப்படுத்துகிறது ★

முற்றொடர்

## தமிழில் வழங்கும் வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| புருஷோத்தமன் | — | ஆடவரிற் சிறந்தவன் |
| புரோகிதர் | — | வேள்வி செய்பவர் |
| புரோட்சணம் | — | தெளித்தல் |
| புவனம் | — | உலகம் |
| புவி | — | நிலம் |
| புளகம் | — | மயிர் சிலிர்த்தல் |
| புனர்ஜென்மம் | — | மறுபிறப்பு |
| பூகம் | — | உருண்டை |
| பூகம்பம் | — | நிலநடுக்கம் |
| பூகோளசாஸ்திரம் | — | நிலநூல் |
| பூசாரி | — | வழிபாடு செய்பவர் |
| பூசாவிதி | — | வழிபாட்டு முறை |
| பூஜை | — | வணக்கம் |
| பூஷணம் | — | அணிகலம் |
| பூச்சியம் | — | இன்மை |
| பூஸ்திதி | — | நிலச்செல்வம் |
| பூதசரீரம் | — | பருவுடல் |
| பூதம் | — | முதற்பொருள் |
| பூதரம் | — | மலை |
| பூதலம் | — | உலகம் - நிலம் |
| பூதி | — | தூள் |
| பூமி | — | நிலம் |
| பூமிதேவி | — | நிலமகள் |
| பூரகம் | — | உள்ளிழுத்தல் |

## சிறுவர் சிந்தனைக்கு....

நம்பினால் நம்புங்கள். இவை அமெரிக்கச் சிறுவர்கள் எழுதியவை.

ஆதாரம்: Integrai Yoga

### *To See God*

**Scot Hansma — Age 6**

1. Take all of the bead out of your mind.
2. Start to trust God.
3. Thank God.
4. Listen to God.
5. Try to see God.

### *A Father*

**Bala Otto — Age 12**

1. A father is the head of the family.
2. A father is one who disciplines his children.
3. A father is one who loves his children.
4. A father is one who makes his children happy when he comes home.
5. A father is one who gives out hugs and kisses.
6. And most important of all, a father is one who teaches his children how to control their minds and be happy all the times.
7. Thank you for being my father.

## பூவரசு

நம்மவரின் குடிசைத்தொழிலுக்குப் பெருமளவில் கைகொடுத்த பூவரசு இன்று விரைவில் மறைகிறது. எங்கும் மதில்கள் அமைப்பவர்கள் வேலிகளை நீக்கிவிடுவதோடு, மயிர்கொட்டிப் புழுவுக்கு அஞ்சி பூவரசை நாடுகிறார்கள் இல்லை.

ஒரு தலைமுறைக் காலத்தில் நன்றாக முற்றிச் சிவந்து வைரம்பாயும் பூவரசு, இடியப்ப உரல், பாக்குரல், மிதிதடி, வண்டிற்சில்லு முதலியனவுக்கு மூலமாயிருந்தது. விறகாக எரிக்கும்போது நல்லதணல் உண்டாவது.

முற்காலத்தவர் பிரேதங்களைத் தகனஞ்செய்வதற்குக் காட்டுவிறகிலும் பார்க்க வளவில் நான்கு பூவரசைத் தறித்துப் பணத்தை மிச்சம்பிடித்தார்கள். விறகு விலையேறிப் போகும்போது, வளவில் மரங்கள் சிக்கனத்தைத் தரும்தானே.

பூவரசு எங்கும் உண்டாகும். வீதியோரங்களில் நட்டு நிழலை உண்டாக்கலாம். நான்குபேர் அபிவிருத்திக்கு அணிதிரள எல்லோரும் நானும்கூட என்று திரண்டு வருவார்கள்.

## அண்ணா கமத்து ஆதரவு

மன்னாரையடுத்த மடுமாதா கோயிலுக்கும் அப்பால் இருபதுமைல் தூரத்தில் அடர்ந்த காட்டில் வாழும் ஆதரவற்றவர்களுக்குத் தேனைத்தவிர வேறெவ்வித வருவாயும் கிடையாது. அங்கே ஏறக்குறைய ஐம்பது குடும்பங்கள், நகரம், ஓட்டு வீடு, போகபோக்கிய பண்டங்கள், உணவுகள், உடைகள் அறியாமல், அநுபவிக்காமல் வாழ்கின்றார்கள். அழைப்பின் நிமித்தம் அங்கே அடைமழையும் வெள்ளமும் தாண்டிச் சென்ற மில்க்வைற் தொழிலதிபருக்கும் அண்ணா தொழிலதிபருக்கும் அரச உப அதிபருக்கும் மகத்தான மங்களகரமான வரவேற்பு இருட்டு வேளையில் ஒரே ஒரு விளக்கு வெளிச்சத்தில் இடம்பெற்றது. பரிதாபகரமான குடிமக்களின் முழுத்துயரத்தையும் நடைமுறையில் நாளும் பொழுதும் கண்டறிந்துவரும் அரச உதவியதிபர், ''இவர்களுக்குக் கோழி வளப்பும் ஆடு வளர்ப்பும் உடனடியாகக் கைகொடுக்கலாம்'' என்று கருத்துத்தெரிவித்தார். அதைக்கேட்ட அண்ணா தொழிலதிபர் கண்கலங்கி, எவ்விதபேச்சுமின்றி, அரச உதவியதிபரிடம் ''இவர்களை இரண்டு இரண்டுபேராக அனுப்புங்கள் இணுவில் கமத்தில் இலவசமாக உணவு உடை உறைவிடமளித்துப் பயிற்சி கொடுத்து, மீளும்போது ஆளுக்கு இரண்டு கோழிகளும் கொடுத்துவிடலாம்'' என்றார். கூட்டத்தில் இருந்த சுந்தரம் மருந்துக்கடையதிபர் ''இவ்வூரவர் காடுபடுதிரவியங்களான வேர், பட்டை முதலியனவற்றைச் சேர்த்துத்தந்தால் நல்லவிலை கொடுக்கலாம்'' என்றார்.

## வரட்சியைத் தாங்கும் நல்ல இனத்துப் பலாமரம்

பாணந்துறையைச் சேர்ந்த G. T. பொன்சேகா என்பவர் தமது ஆராய்ச்சியில் பயன்கண்ட யோகூர் பலா மரத்தின் விதைகளை ஆயிரக்கணக்கில் மில்க்வைற் நாற்றுமேடைக்குத் தந்துள்ளார்கள்.

## வெறும் வீரம் மாத்திரம் போதாது விவேகமும் அமைதல் வேண்டும்

பழைய மசிடோனிய மன்னன் பிலிப் என்பவன் குதிரைகளில் விருப்பமுள்ளவன். பைலோனிசியஸ் என்பான் அழகிய பெரிய குதிரையைக் கொண்டு வந்து ''அரசே! இதன் விலை 13 தங்கக்காசு. இது நன்றாக வேகமாக அணிநடையும் ஓட்டமும் பழகியுள்ளது. இதன் பெயர் புசிபாலஸ் என்றான். பிலிப் குதிரையின் பழக்கத்தைப் பரீட்சிப்பதற்குக் குதிரைப் படைத் தலைவனைப் பணித்தான். படைத் தலைவன் முதலாகக் குதிரைப் படை வீரர் அந்தக் குதிரைக்கு அருகே போகமுடியாத வகையில் அது துள்ளிக் குதித்து பிரண்டு காலால் அடிக்கத் தொடங்கியது. எல்லோரும் முடியாதெனவே, பிலிப் குதிரை வேண்டாம் என்று திருப்பிவிட்டான். அதைப் பார்த்துக்கொண்டு நின்ற பிலிப்பின் 13 வயது மைந்தன் அலெக்சாண்டர் ''என்ன அழகான குதிரை'' என்று அசைப்பட்டான். ''உன்னால் இதை அடக்கிச் சவாரி செய்ய முடியுமா?'' என்று பிலிப் கோபத்தோடு கேட்டான். ''இதோபாருங்கள்'' என்று கூறியவண்ணம் அலெக்சாண்டர் குதிரைமேல் ஏறி நீண்ட தூரம் சவாரி செய்து வெற்றிகரமாக மீண்டு வந்து, ''அழகான குதிரை, அருமையான குதிரை'' என்றான். ''என் கண்மணியனைய மைந்தனே உனக்கு இந்த மசிடோனியா மிகச் சிறிய தேசம். நீ பெரிய பேரரசைப் பரிபாலிக்கத் தகுந்தவன்'' என்று வாழ்த்தினார். அலெக்சாண்டரின் வெற்றிக்குச் சாதகமான விவேகம் வேறொன்றுமில்லை. குதிரை தன் நிழலைக் கண்டு அஞ்சியதால் துள்ளிக் குதித்தது. அலெக்சாண்டர், கடிவாளத்தை இறுகப் பிடித்து இழுத்து அது மேலே பார்க்கும் வண்ணம் செய்து, காரியத்தைச் சாதித்தான்.

## லண்டனில் பொங்கல்

குத்துவிளக்கு பூரணகும்பம், அர்ச்சனைத்தட்டு, பொங்கற்பானை, கொடுக்கும் கரங்கள், உழவும் உழவனும் இத்தியாதி சின்னங்கள் பொறித்த விழா அழைப்பு ஒன்று எமக்குக்கிடைத்தது. இவ்வளவு கோலாகலமாக அழைத்த விழா எசெக்ஸ் மாவட்டத்தில் சைவசம்பிரதாய பூர்வமாக நடைபெற்ற நற்செய்தியும் நமக்குக்கிடைத்துள்ளது. இவற்றை நடத்துபவர் சைவ முன்னேற்றச் சங்கத்தினர் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

## தென்னை வளம்

வடபகுதி மக்கள் இம்முறை ஆயிரக்கணக்கான தென்னம் பிள்ளைகள் நாட்டியுள்ளார்கள். இவற்றில் அமைந்த சிறப்பு இவை விரைவில் அதிகமாக, அதிகம் உயரமாய் வளராமல் பயன்தரப்போகின்றன. இன்னும் ஒன்று ஓரளவு சிரமப்பட்டு இவற்றை வளர்த்தல் வேண்டும். இவற்றுக்கான துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பெற்றது. இவ்வாண்டு மில்க்வைற் தொழிலதிபர் தென்னை வளத்துக்கு அதிக கவனம் எடுத்தமையைப் பெரியவர்கள் பாராட்டுகின்றார்கள்.

## ஊழ்வினையும் தமிழரும்

தமிழர் வாழ்விலும் தாழ்விலும் ஊழ்வினை பெரும் பங்குபற்றுகிறது என்பதைச் சங்ககாலப் புலவர்கள், காப்பியப் புலவர்கள், புராணப் புலவர்கள், நீதி நூற்புலவர்கள், பிரபந்தப் புலவர்கள் எல்லோரும் ஒப்ப முடிந்த உறுதியான உடன்பாடாகப் பாடியுள்ளார்கள். மிகப் பழைய காலத்து இலக்கண நூலான தொல்காப்பியஞ் செய்த தொல்காப்பியரும், ''பால் வரை தெய்வம் வினையே பூதம்'' என்பன போன்ற பல சூத்திரங்களில் ஊழ்வினையைக் குறிப்பிட்டுள்ளார்.

கணியன் பூங்குன்றனார் முதலாய நற்றமிழ்ப் புலவர்கள் ஊழ்வினையின் போக்கை அநுபவத்திற் கண்டு உள்ளபடி பாடியுள்ளார்கள். ஆற்றோட்டத்தில் மிதந்து செல்லும் பொருள், ஊழ்வழி ஆருயிர் செல்வதொக்கும் எனப் பாடியுள்ளார்கள். நீதி நூலில் தலையாய திருக்குறள் செய்த திருவள்ளுவர் ஊழ் என ஓர் அத்தியாயம் வகுத்து ''ஊழிற் பெருவலியாவுள'' எனப்பாடியுள்ளார். சிலப்பதிகாரம் என்னும் காப்பியஞ் செய்த இளங்கோவடிகள் என்னும் இளவரசர் ''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'' என்பதைப் பீடிகையாகக் கொண்டு காப்பியம் பாடியுள்ளார். இங்ஙனமே சிந்தாமணி என்னும் காப்பியம் படைத்த திருத்தக்க தேவர் என்னும் பெரியார், பிறப்பு இறப்பு, தோற்றம் மறைவு முதலியனவெல்லாம் ஆகூழ், போகூழ் என்னும் இருவினையின் பாற்படும் என்பர். ''ஆம் பொருள்கள் ஆகுமது யார்க்கும் அழிக்கொண்ணாப் போம் பொருள்கள் போகுமவை பொறியின் வகை வண்ணம்'' என்றும் ''சாதலும் பிறத்தல் தானும் தம் வினைப் பயத்தின் ஆகும் ஆதலும் அழிவும் எல்லாம் அவை பொருட்கியல்பு கண்டாய்'' என்றும் பாடுவர்.

இராமகாதை என்னும் இராமாயணம் தந்த கம்பர் ''விதியின் பிழை நீ இதற்கு என்னை வெகுண்டது?'' என்று இராமர் இலட்சுமணனின் சீற்றத்தைத் தணித்தபோது கூறியதாகப் பாடியுள்ளார்.

## கற்றவரைப் பழித்தலாகாது

கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம் என்பது உலகநீதி. காளமேகம் என்பவர் ஒரு பெரும் புலவர். அவர் கடவுள் அருள்பெற்ற அறிவாளி. அவர் சொன்ன காரியம் எதுவும் நடக்கும். அவர் ஒருநாள் ஒரு வீதி வழியே போனார். வழியில் ஒருவீட்டு வாசலில் ஒரு பெண் விளக்குமாற்றால் குப்பை கூட்டிக்கொண்டு நின்றாள். அவள் காளமேகப்புலவரை அலட்சியமாகப் பார்த்து ''காளமேகம் என்னும் கட்டை விளக்குமாறு வருகிறது'' என்று கூறினாள். அதைக்கேட்டகாளமேகப்புலவர்புன்னகைபூத்து ''ஆமாம் அம்மா, எல்லாம் கூட்டக் கூட்டத் தெரியும்'' என்று கூறிக்கொண்டே தன் வழியே போனார். அவர் போனபின் அப்பெண் கூட்டக் கூட்டக் குப்பை பெருகியது. அவளுக்குக் கைகளும் முதுகும் வலித்தன. முழங்கால்கள் விறைத்தன. அவளால் குப்பையைக் கூட்ட முடியவில்லை. விளக்குமாறு முறிந்து கட்டை விளக்குமாறானது.

★ மனிதன் நல்லவனானால் உலகமும் நல்லதாகும் ★



பாடம்: ஒன்று

## எமது சமயம்

1. சைவம் என்பதன் கருத்து என்ன?
சிவத்தோடு தொடர்பு உடையது.

2. சமயம் என்பதன் கருத்து என்ன?
வழி, நெறி, மார்க்கம்.

3. சைவ சமயம் என்பதன் பொருள் என்ன?
சிவபெருமானை அடைதற்கான வழி.

4. சைவப் பெரியாரைப்பற்றி கூறும் நூல் எது?
பெரியபுராணம்.

5. பெரியபுராணத்தின் வேறு பெயர் என்ன?
திருத்தொண்டர் புராணம், மாக்கதை.

6. சைவசமயம் விளக்கும் முப்பொருள்கள் எவை?
பதி, பசு, பாசம்.

7. பதி என்றால் என்ன?
முழுமுதற் கடவுளாகிய சிவனைக் குறிப்பது.

8. சைவநூல் துணிபு என்ன?
கடவுள் ஒருவரே என்பது.

9. பசு என்பதன் பொருள் என்ன?
உயிர்கள், ஆன்மாக்கள்.

10. பாசம் என்றால் என்ன?
ஆணவம், கன்மம், மாயை ஆகிய அழுக்குகள்.

11. ஆணவம் என்ன செய்கிறது?
அது உயிர்களைப்பற்றி நிற்கிறது.
உயிர்களை மெய்யறிவு பெற்று இறைவனை உணரா வண்ணம் மறைக்கிறது.

12. இறைவன் உலகத்தை ஏன் படைத்தார்?
உயிர்களைப் பக்குவப்படுத்துவதற்கு.

13. இறைவன் உயிர்களுக்கு என்ன நன்மை செய்கிறார்?
உடம்பையும் நுகர்பொருள்களையும் கொடுத்தருளுகிறார்.

14. உடம்பு பெற்ற உயிர் என்ன செய்கிறது?
நல்வினை தீவினைகளைச் செய்து இன்பத்தையும் துன்பத்தையும் நுகர்கிறது.

15. உடம்புபெற்ற உயிர் செய்யவேண்டியது என்ன?
அறத்தின் வழி நிற்றல்.

16. அறம் என்றால் என்ன?
தர்மம்.

17. அறம் செய்தால் என்ன உண்டாகும்?
அன்பு உண்டாகும்.

18. அன்பினால் என்ன பயன்?
அன்பு முதிர்ந்தால் அருள் உண்டாகும்.

19. அருளினால் என்ன பயன்?
அருளினால் இறைவனை அடையத் தவம் உண்டாகும்.

20. தவத்தினால் உண்டாகும் பேறு என்ன?
பிறவித்துன்பம் நீங்கிப் பேரின்பம் பெறுதல்.




## வல்லாரை

சண்டகி, பிண்டீர், யோசனவல்லி முதலிய பெயர்கள் உள்ள வல்லாரை சிறந்த மூலிகை. கீரைபோல இதனைச் சமையலில் சேர்த்துக்கொள்ளலாம். சாதாரணமாக எங்கும் கிடைப்பதாயினும் விலையதிகமாகவுள்ளது. நாமே வீட்டுமுற்றம் முதலிய வெற்றிடங்களிலும், சாடிகள் சட்டிகளிலும் உண்டாக்கிப் பயன்பெறலாம். நீர் நிலைகளுக்கு அருகில் நீண்ட தண்டுடன் வளரும் செடியைவிட வயல் வரம்புகளில் குறளாக மெல்லிய இலைகளுடன் வளர்வது தூய்மையும் சத்தும் உள்ளதாகும்.

வல்லாரையை மிகவும் அதிகமாக உண்ணாமல் அளவோடு உட்கொள்ளல் நல்லது. அதன் துவர்ப்புத்தன்மையில் சுகம்பேசும். உடலைத் தேற்றும், உரமாக்கும். பெண்களுக்கு ருதுவுண்டாக்கும் என்பர்.

மலத்தை கழிக்கும். வாய்ப்புண் ஆற்றும். தொண்டை கம்மலைப்போக்கும். குட்டம், மேகம் முதலியனவற்றை நீக்கும்.

சுரக்காய்ச்சலுக்கு வல்லாரை, துளசி, மிளகு அளவாக அரைத்து உருட்டிக் கொடுக்கச் சுகம் உண்டாகும். குழந்தைகளின் வயிற்றுக்கடுப்பு நீங்கச் சீரகமும் சர்க்கரையும் வல்லாரையும் அரைத்துக்கொடுக்கலாம்.

வல்லாரையையும் வெந்தயத்தையும் சேர்த்து அவித்துச் சாறுவடித்துக் கொடுக்க வயிற்றுக்கோளாறு நீங்கும்.

## வஜனாம்ருதம்

(சுவாமி கெங்காதரானந்தா)

அறநெறியும் அரசாட்சியும் பிராணனும் சரீரமும் போன்றவை.

சமயக் கல்வியால் புத்திக்கு அப்பாற்பட்ட விடயங்களையும் அறிய முடியும்.

மதமும் தர்மமும் சிப்பியும் முத்தும்போன்றவை.

பறவை அலகினால் பல அலுவல்கள் செய்யுமாப்போல் ஞானி ஞானத்தால் பல காரியங்களைச் சாதிப்பர்.

மதுவை அமுதம் என அசுரர் கருதுவதுபோல் அஞ்ஞானி சிற்றின்பத்தைப் பேரின்பம் எனக்கருதுவன்.

கடம்புப்பால் குடிக்கும் கன்றுச்குட்டியின் குடல் அழுக்கு நீங்குவதுபோல், ஞானப்பால் பருகும் ஞானியின் அகமலங்கள் நீங்குகின்றன.

ஞானமும் பக்தியும் இருகண்கள் போன்றவை.

★ கடவுள் தண்டனை நம்மைத் திருத்துகின்றவை ★

## கொங்கு மண்டலம்

தமிழ்நாட்டில் கோவை என்னும் கோயம்புத்தூர் விவசாயம் கைத்தொழில் என்னும் இருதுறைகளிலும் மேம்பட்டு நிலவுகின்றது. அங்கே இருபெரும் ஆதீனங்கள் சிரவை, பேரூர் என்பன. ஆதீனத்து மகான்கள் செய்த அமுதனைய நூல்கள் அளவில்லாதன. சிவக்கவி மணி, சி. எம். செட்டியார் முதலாய சைவப்பெரியார்களும் கோவைகிழார்களே, பழைய கல்வியமைச்சர், இன்றைய சிவானந்தசுவாமிகள் மடத்து இளைஞன் முதலானவர்கள் தொண்டு பெரிது, இன்றைய கோவையில் சிவபிருந்தா தேவி அன்னையாரின் அழைப்பில் பெரியளவில் மாதர் மகாநாடு கூடுகிறது. அதற்கு சிரவை, பேரூர் ஆதீனப் பெரியார் அருளாசியும் பொருளுதவியும் புரிகிறார்கள் போலும். விழா நன்கு நடைபெறச் சாந்தலிங்கசுவாமிகள் நல்லாசி கிடைப்பதாக. பேரூர்ப் பெருமானின் திருவருள் முன் நிற்பதாக.

## விண்ணாட்டுக் கற்பகமே வியனுலகில் மரங்கள்

1. மண்ணீரம் காயுமுன் மரங்களை நாம் நட்டால்
உண்ணீர் உண்ணீர் என உபகரிக்கும் அவைதாம்
தண்ணீரும் பாய்ச்சித் தழைக்கவைத்தால் அவைதாம்
விண்ணாட்டுக் கற்பகம் போல் வியனுலகில் ஈயும்.

2. விறகுதரும் மரங்கள்பல விரும்பியவாறுதவும்
நறுமலர்கள் தருமவைதாம் நானிலத்தில் பலவாம்
உறவு நிறை விலங்கினங்கள் தங்குமிடம் மரங்கள்
சிறகுலர்த்தும் பறவைகளும் சேருமிடம் மரங்கள்.

3. மண்குளிர மழைப் பொழிவை வாவென்றழைக்கும்
விண்ணதிரும் புயலினையும் விடோமெனவே தடுக்கும்
கண்ணையிமை காப்பதுபோல் காசினைக் காக்கும்
பண்ணைவளம் செழிப்பதற்கு மரநிரைகள் முதன்மை.

4. மாடுதின்ன ஆடுதின்ன மக்கள் உண்ண இலைகள்
வீடுகட்டி வாழ்வதற்கு விந்தைமிகு மரங்கள்
காடுவளம் சிறப்பதற்குக் கனத்த பெருமரங்கள்
நாடுவளம் சிறப்பதற்கும் நல்லமரம் முதன்மை.

5. தொட்டில் செய்து தாலாட்ட மரமுதவும் முதலில்
கொட்டில் குடில் குடிசைகளில் மரமுதவியதிகம்
கட்டில் முதல் தளபாட வரிசைகளும் மரத்தால்
நட்டிடல் மரவரிசை நமது பெருங்கடமை.

6. பிறந்தநாள் நினைவுகொளப் பிந்தாமல் நடுக
இறந்தவர்தம் நினைவாக ஏதும் ஒன்று நடுக
அறந்தழைக்க வேண்டுமெனில் அவசரம் நடுக
பிறந்தபயன் பெயர் நிலைக்கப் பெருமரங்கள் நடுக.

## விறகுப்பஞ்சம்

உள் நாட்டில் விறகுப்பஞ்சம் தீர்வதற்காக ஏராளமான சவுக்கு மரங்களை நிரையாக நடுங்கள் என்று மில்க்வைற் தொழிலதிபர் கன்றுகளை ஆயிரக்கணக்கில் விநியோகித்துள்ளார். சவுக்கு நல்ல விறகு.

# அருள் விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்

1. தூய அன்பு அமைதிக்கு இருப்பிடம்
2. வாழ்க்கை நெறி அறிவதே சீரிய கல்வி
3. இறைவனைப் பணிபவனை உலகம் பணிகிறது
4. உள்ளத்தை வென்றவன் உலகை வெல்கிறான்
5. தன்கையே தனக்கு உதவி என்பவன் செல்வன்
6. உறுதிப்பாடு உண்டானால் செயல்திறன் வளரும்
7. பணத்தைப் பயன் செய்வதற்கு அறிந்தவன் தருமசீலன்.
8. சான்றோர் சொல் வாழ்வுக்கு அருமருந்தாகும்
9. ஒவ்வொரு கணப்பொழுதும் கடவுட்கொடை
10. விதைத்தது எதுவோ அதுவே விளைவாகிறது.
11. ஆண்மை, பெண்மை, மென்மை சான்றோனின் போக்கு.
12. நல்லசெயலே பிரார்த்தனை யாகவும் ஒளிவிடும்
13. பிறர்நலமும் உழைப்பும் வாழ்வில் வெற்றி தருவன
14. இறைவனின் கருவியாய் இருப்பவன் உலகின் உபகாரி.
15. மனத்தின் மாசு நீங்கினால் மண்ணுலகு விண்ணுலகமாகும்.
16. நல்ல ஆட்சி எவரையும் புறக்கணிக்கமாட்டாது.
17. இந்த வாழ்வும் வசதியும் எமக்குப் பெருவாய்ப்பானவை.
18. இறைவனின் திருவருள் ஆற்றுநீர் போன்றது
19. தூய வாழ்வுக்கு நிகரானது எதுவும் இல்லை
20. படித்தவர்கள் எல்லோரும் பெரியவர்கள் அல்லர்
21. நன்மை கடைப்பிடிப்பவனுக்கு நல்வழிதானே வரும்
22. நுண்ணறிவு என்பது தன்னைத்தானே அறியுந்திறன்
23. இறைவன் திருநாம செபத்தால் மனவழுக்கு நீங்கும்
24. முறையாக உழைப்பவர்கள் உயர்ந்தவர்கள்.
25. களங்கமற்ற விசுவாசம் கபடமற்ற அன்பு கடவுளைக் காட்டும்.

## மரவள்ளிக்கிழங்கு

முரிந்த கிழங்கை உடன் பயன் செய்தல் வேண்டும். முரிந்ததை வைத்து ஆறுதலாகப் பயன்படுத்தலாகாது. எந்தக் கிழங்கையும் இரண்டு நாள்களுக்கு மேல் வைத்திருத்தலாகாது. நிறவேற்றுமை நஞ்சு ஊறியதாகும். தோலை நன்றாக உரித்துக் கிழங்கை நன்றாகக் கழுவிக் கொள்ள வேண்டும். ஒரு மணி நேரம் திறந்த பாத்திரத்தில் அவித்தல் நல்லது. அதிக நீர்விட்டு அவித்தல் நன்று. அவித்தபின் தண்ணீரைக் கொட்டிவிட வேண்டும்.

★ இன்னல்களை அகற்றுதல் வாழ்வின் குறிக்கோள் ★

# நெல்லுப் பொதி

பிள்ளை பிறந்த மகிழ்ச்சியில் பெற்றோர் உற்றோர் அயலவர் மகிழ்ந்து மிதக்கும்போது, மருத்துவிச்சி மெய்ப் பாட்டோடு ''நெல்லுப் பொதியோடும் வந்திரோ தம்பி! நெல்லு விளை நாடும் கண்டீரோ தம்பி!'' என்று முன் னிளைப் பரவலாகப் பாடிப் பாராட்டி வரவேற்று வாழ்த்தி மகிழ்ந்து பரிசுகள் பெற்றுப் போவாள். இவையாவும் அந்தக்காலம்.

தமிழன் விளைவு செய்த நெல்லினங்கள் பத்தாயம் பத்தாயமாக வீட்டில் குவிந்து தேங்கிக் கிடந்தமை அந் தக் காலம். தமிழன் விளைவு செய்த நெல்லினங்களும் அவற்றின் குணநலங்களும் அக்காலப் புலவர் நாவிற் பொருந்திப் பாட்டுக்களாக மலர்ந்து உதிர்ந்து கிடக்கின் றன: திரட்டித் தொகுப்பதற்கு நேரமில்லை.

சோற்றுக்குரியவை, கஞ்சிக்குரியவை, பலகாரத்துக் குரியவை, பத்தியத்துக்குரியவை, பருவமங்கையர்க் குரியவை, மகவீன்ற தாய்க்குரியவை, முதியவர்க்குரியவை என நெல்லினங்கள் கனத்திலும், குணத்திலும், நிறத் திலும் பேதப்பட்டு இருந்தன.

பழைய பள்ளுப் பிரபந்தங்களைத் தொடவும்கூடாது படிக்கவும் கூடாது என்ற அமைப்பில் அவற்றிற் கூறப் பட்ட நெல்லினங்களை நாம் மறந்துவிட்டோம். இலக்க மிடப்பட்ட வெறும் நெல்லினங்களை நினைவிற் கொண்டுள் ளோம்.

## சம்பா, சம்பா, சம்பா!

சம்பா அரிசி கொழும்புத் தமிழருக்கு நன்றாகப் பிடிக் கும். சுதுபத் என்று வெள்ளைச் சோற்றுக்குச் சிங்களவர் பெயர் வைத்தமை பெருமைதானே. ஈர்க்குச் சம்பா, புழுகு சம்பா, கோரைச் சம்பா, குறுஞ் சம்பா, சீரகச் சம்பா, காளான் சம்பா, மைச் சம்பா, கோடைச் சம்பா, காடைச் சம்பா, மல்லிகைச் சாம்பா, இலுப்பைப் பூச் சம்பா, மணிச் சம்பா, வளைதடிச் சம்பா, கைவரைச் சம்பா, செஞ் சம்பா, கல்லுண்டைச் சம்பா, குண்டுச் சம்பா, குன்றிமணிச் சம்பா முதலியனவும் இன்னும் பல வும் புலவர்களாற் பாடப்பெற்றுள்ளன.

இத்தகைய சம்பா இனங்களையும் வேறு செந்நெல் லினங்களையும் கண்டவர்கள் உண்டவர்கள் அவற்றின் அளவையும் குணங்களையும் அறிந்தவகை பெரிது என்று குமாரசுவாமிப் புலவர் பாடியுள்ளார்.

செந்நெல் வகைக்கும் சிறுதானிய வகைக்கும்
இந்நிலத்தி லுண்டோ இலக்கென்ப — உண்ணுங்கால்
கண்டமட்டி லேபெயராம் கண்ட அவரவர்கள்
உண்டமட்டி லேசுவையாம் ஓது.

## விவசாய விருத்தியில் விழிப்புணர்ச்சி
## சோயா அவரை லாபம் தரும்

சோயா மழை வீழ்ச்சியில் ஏக்கர் ஒன்றில் 1250 ருத் தல் தருமானால், நீர்ப்பாசனத்தில் 2000 ருத்தல் தரும் என்பது உறுதி. இத்தொகை மிகக்குறைந்த விளைவு. கூடிய விளைவு 2500 ருத்தல் என்பர். ஏக்கர் ஒன்றில் மழையுதவியில் 540 ரூபாவும், பாசன முறையில் 670 ரூபா வும் நிச்சயம்.

சோயா பயனுள்ள சத்துள்ள தானியம். அது வர வர விலையேறப் போகிறது.




பகவத்கீதை

மனம் சமநிலையில் நிற்கப்பெற்றோர் இவ்வுலகத் திலேயே இயற்கையை வென்றோராவர்.

விரும்பிய பொருளைப் பெறும்போது களிகொள்ளான் பிரியமற்றதைப் பெறும்போது துயர்ப்படமாட்டான்.

புறத்தீண்டுதல்களில் பற்றுதல் கொள்ளாமல் தனக் குள்ளே இன்பத்தைக் காண்போன், பிரம்மயோகத்திற் பொருந்தி அழியாத இன்பத்தை எய்துகிறான்.

புறத்தீண்டுதல்களில் தோன்றும் இன்பங்கள் துன்பத் துக்குக் காரணங்களாம். அவை தொடக்கமும் இறுதியும் உடையவை. அறிவுடையோன் அவற்றில் மகிழ்ச்சி யடைவதில்லை.

சரீரம் நீங்குமுன்னர், இவ்வுலகத்திலேயே விருப்பத் தாலும் சினத்தாலும் விளையும் வேகத்தை எவன் பொறுக்கவல்லானோ அந்த மனிதன் யோகி, அவன் இன்பமுடையோன்.

## பர்மா வாழ்க!

அகன்ற பாரதம் என வழங்கிய பெரும் பெயர்ப் பிரதேசத்தில் பர்மா நாடும் ஒன்று. இந்தியா பர்மா என்றே இரட்டையாகவும் அவை வழங்கியுள்ளன. இன் றும் பர்மாவில் பாரதப் பண்பாடு பட்டொளி வீசிப் படர்ந்து நிலவுகிறது. இரங்கூன் என்றால் எங்கள் அயல் நகரம் போல இனிக்கிறது. அங்கேயும் சைவமும் தமிழும் வளர்கின்றன. சிவன் கோயிலை மையமாக கொண்டு சிவப் பணி பொதுப்பணி செய்வார் பலர்.

ஸ்ரீமத் சாதுசந்தனச் சுவாமிகள் தொண்டர் கழகம் மினிக்கோன் பகுதியில் பெருந் தொண்டு புரிகிறது. சமரச சுத்த சன்மார்க்க சங்கத்துக்கு 118 வயது என்றால் அவர் தம்பணியை என்னென்பது.

காலாபஸ்தி வீதியில் ஸ்ரீ நடராசப் பெருமான் ஆலயம் மார்கழித் திருவெம்பாவை விழாச் சிறப்பு, தென்கிழக் காசியா எங்கும் மணப்பது. இவர்களுக்கெல்லாம் இங்கி ருந்தவாறே இலக்கிய சமய நூல்களை வேண்டிய அளவில் அனுப்பிவைக்கின்ற மில்க்வைற் தொழிலதிபருக்கு அங் கெல்லாம் நல்ல புகழ்.

★ நல்லவனுடைய எண்ணம் வீண்போகமாட்டாது ★

## உங்களுக்குத் தெரியுமா?

விடைகள் வேறிடத்தில்

1. ஐரோப்பாவில் குரங்குகள் அதிகம் வாழுமிடம்?
2. பூனைகள் கருத்தரிக்கக்கூடிய வயது?
3. பால்தரும் பசு அதிக நீர் அருந்துவதன் பயன்?
4. நன்ருக வளர்ந்த ஓநாயின் நீளம்?
5. வாலில்லாத குரங்கினம்?
6. அவுஸ்திரேலிய நாயினத்தின் பெயர்?
7. பன்றிகளுக்குக் குறிசுட்டால் ஆவது என்ன?
8. பாய்ந்து நடக்கமுடியாத பிராணி?
9. ஒட்டகம் ஓடக்கூடிய வேகம்?
10. சாதாரண எலி பாயக்கூடிய உயரம்?
11. இரண்டுமுறை பல் முளைக்கும் மிருகம்?
12. உணவின்றிப் பல நாள் வாழும் பிராணி?
13. அமெரிக்க எருமையின் பெயர்?
14. குதிரையின் பற்களின் தொகை?
15. பெண் மானினம் கொம்பு முளைக்கும் இனம்?
16. பனிமனிதன் வாழுமிடம்?
17. சீர்திருத்த காலத்தில் திருத்தப்பெற்றது எது?
18. மிகவும் உயரத்தில் புகைவண்டிப் பாதை உள்ள நாடு?
19. மொன்ற்பிளாங் சுரங்கம் இணைக்கும் நாடுகள்?
20. பெண்கள் ஆளும் உரிமை இல்லை என்னும் சட்டம்.
21. செம்பு, தகரம், பொஸ்பரஸ் சேர்ந்து உருவானது?
22. குரோமியத்தோடு இணைந்திருப்பது?
23. நிற்பதற்கு ஓரிடமிருந்தால் பூமியைப் பெயர்ப்பேன் என்றவர்?
24. நில அளவையில் சங்கிலியின் நீளம்?
25. அயண், ஒக்சைட் என்பது?

## தொல்புரம் விக்கினேஸ்வரா சனசமூகநிலையம்

புரம் எனப் பெயர்பெற்ற பழைய காலத்து நகரங்களுள் கபாடபுரம், அநுரதபுரம் என்பனவற்றின் வரிசையில் வடஇலங்கையில் தொல்புரம் மிகவும் பழைய நகரம். அங்கேயுள்ள சனசமூக நிலையத்தின் மின்னிணைப்பு வைபவமும், மரம் நாட்டும் வைபவமும் சிறப்பாக நடைபெற்ற போது, மில்க்வைற் தொழிலதிபர் பிரதமவிருந்தினராய்ப் பங்குபற்றினர். மில்க்வைற் பனையபிவிருத்திக்கு ஆயிரமாயிரம் பனம்விதை உபகரிக்கும் திரு: துரையப்பா இராசரத்தினம் அவர்களுக்குப் பனைச்சின்னம் பொறித்த போர்வை போர்த்திக் கௌரவித்தார்.

## பிறநாட்டவர் இப்படியும் சொன்னர்கள்

1. பொய் பேசுபவனுக்குச் சத்தியம்பண்ணுதல் கைவந்த கலை.
2. பொய்க்குக் காலில்லை, பழிப்புரைக்கு இறகு உண்டு.
3. பொய் உலகைச் சுற்றிவரும் மெய் நின்ற இடத்தில் வேர் விடும்.
4. சிங்கமும் இலையானிடமிருந்து தற்பாது காப்புச் செய்கிறது.
5. மனிதன் தேடற்கரிய திரவியம் அன்புள்ள மனைவி.
6. மனிதனைப் பொன்னாலும், பொன்னை நெருப்பாலும் அறியலாம்.
7. மந்திரிமாரும் காதலர்களும் உண்மை பேசுதல் குறைவு.
8. தனியே வாழத் தெரியாதவனுக்குத் தொல்லைகள் வந்துசேரும்.
9. பிழைவிடாதவன் எதனையும் சாதிக்கமாட்டான்.
10. பணத்தை ஈட்டுதல் சுலபம் அதைக் காத்தல் கடினம்.
11. சட்டத்தரணிகளின் வீடுகள் முட்டாள்களின் தலையிலமைந்தவை.
12. பணம் போகும் வழியெல்லாம் வாசல் திறக்கும்.
13. எலியின் நிழல் ஆனையின் நிழலளவாகாது.
14. கீழ்ப்படிந்து நடத்தல் காரியசித்தியின் தாய்.
15. யுத்தத்தின் இறுதி நோக்கம் சமாதானம் செய்தல்.

## மூளாயில் மரம்நாட்டு விழா

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தார் அண்மையில் மரம் நாட்டு விழா பெருமளவில் செய்தபோது மில்க்வைற் தொழிலதிபர் பங்குபற்றி உரையாற்றினர்.

## வண்ணார்பண்ணை

யாழ்ப்பாணத்து நல்லூருக்கு மேற்கில் அமைந்த பெரும் பகுதி வண்ணார்பண்ணை என வழங்கியது. போத்துக்கேயர் வருவதற்கு முன்னரே இப்பிரதேசம் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. படித்தவர்களும் பெரியவர்களும் நெருக்கமாக வாழ்ந்த பிரதேசத்தில் வணிகம், கைத்தொழில், கலைகள் முதலியன வளம்பெற்றுச் சிறந்து விளங்கின. வண்-கிழக்குப் பகுதியிலே வீரமாகாளியம்மன் கோயிலும், தமிழரசரின் ஆனைகளின் பந்தியும், அம்மைச்சி நாச்சியின் குளமும் அரச வெளியும் புகழ்பெற்ற பகுதிகளாயிருந்தன. நல்லூரிலிருந்து கைலாசபிள்ளையார் கோயில், செட்டியார் சிவன் கோயில், சைவப்பிரகாச வித்தியாசாலை, நாச்சிமார் கோயில், தலையாளி ஞான வைரவ கோயிலடியீருகச் சுற்றுவட்டமாக நாவலர் கால் தோயவும் பல்லக்கிலும் சென்று சென்று சைவமும் தமிழும் வளர்த்தவர். வண்ணார்பண்ணையை நாவலர் நகரம் என வழங்கினுல் நல்லது.

★ எவர் உதவியும் கடவுள் உதவியாக வருகிறது ★

## அடைக்கலம் புகுந்தவரைக் காத்தல் வேண்டும்

கோவலன் என்பான் பெரிய வணிகன். அரசறியப் பெரும் புகழ், செல்வம், குடிப்பிறப்பு, நற்குணம் முதலிய அரும் பெரும் பேறுகள் பெற்றவன். அவனுடைய மனைவி கற்பிற் சிறந்த கண்ணகி. கோவலன் செல்வம் எல்லாவற்றையும் இழந்து, சோழ நாட்டை விட்டுப் பாண்டி நாட்டில் பொருள் தேடி வாழப் போனான். அவனுடன் கண்ணகியும் கால்நடையாகக் காடுகளைக் கடந்துபோனாள்.

அவர்கள் போன வழியில் கவுந்தியடிகள் என்னும் நரை மூதாட்டியைச் சந்தித்தனர். கவுந்தியடிகள் கோவலன் கண்ணகிக்கு வழித்துணையாகச் சென்று, அவர்களை ஆயர்பாடி என்னும் இடையர் சேரியில் ஒரு வீட்டில் பாதுகாப்பாக இருக்குமாறு அடைக்கலம் கொடுத்தார். ''தவத்தோர் அடைக்கலம் தான் சிறிதாயினும் மிகப் பேரின்பம் பயப்பதாகும்'' எனக் கருதிய ஆயர் அடைக்கலம் புகுந்தவரை நன்றாக உபசரித்துத் தங்கள் ஆடல் பாடல்களால் மகிழ்வித்தனர்.

யாழ்ப்பாணத்துப் பழைய மனனன் கனகசூரியன் தன் மைந்தர்களாய பரராசசேகரன், செகராசசேகரன் ஆகியோரைத் தமிழ்நாட்டில் திருக்கோவலூரில் பாண்டியரிடம் ஒப்படைத்தான். அடைக்கலம்புகுந்த இளவரசர்களைத் தமிழ்நாட்டார் தலைசிறந்த பண்பிகளாகவும் வீரர்களாகவும் விவேகிகளாகவும் உருவாக்கி விட்டனர்.

## திருவாதிரை மலர்

காரைநகர் மணிவாசகர் சபையினர் மகத்தான தொண்டின் சீர்மையில் மலர்ந்த இம்மலர், ஆடும் அம்பலத்தானின் அருகில் ஆட்டுவிக்கும் அம்மையும், அருள் வேண்டிநிற்கும் வாதவூரடிகளும், வந்தித்து நிற்கும் பதஞ்சலி முனிவரும் புலிக்கால் முனிவரும் சேரத் தேவை, சபை முகப்பில் சேர்ந்துள்ளது.

உள்ளே ஆதிரை விழவும், அம்பா ஆடலும், அண்ணலின் அருளுங்கோலம், திண்ணபுர அந்தாதி, ஆட்கொள்ளும் குருமணி, திருமுறைகள் முதலிய கட்டுரைகள் அறிஞர் பலரின் கருத்தாழங் காட்டுகின்றன. காரைநகர்ச் சிவன்கோயில் கோபுரத் திருப்பணிக்கு ஏதாவது அனுப்புங்கள். சிவத்திரு. க. வைத்தீஸ்வரக் குருக்கள் இம்மலரை உங்களுக்கு இலவசமாக அனுப்புவார் என நினைக்கிறோம்.

## தர்மசேவா சபை

இத்தகைய புதிய பெயரில் பழைய ஆச்சிரமமான இணுவில் காரைக்கால் நடராசமுனிவர் மண்டபத்தில் பிலிப்பீன்ஸ் நாட்டுத் துறவியும் சுவாமியுமான ஆச்சாரியா விமல் அவர்களின் தலைமையில் 1-1-1984 இல் முற்பகல் சிறுவர் சிறுமியரின் சிவநடனம், பார்வதி நடனம் ஆகியவை யோகாசன வழியில் இடம்பெறும் வகையில் நடைபெற்றன. பிரதம விருந்தினருள் ஒருவராகக் கலந்துகொண்ட மில்க்வைற் தொழிலதிபர் சிறுவர்களுக்குப் பரிசுகளும் உபகரிப்புகளும் நல்கினார்.

## *Tripitaka*

My thought has wandered in all directions throughout the world. I have never yet met with anything that was dearer to anyone than his own self. Since to others, to each one for himself, the self is dear, therefore let him who deseres his own advantage not harm another.

## *Sutta Pitaka*

Let him not kill, nor cause to be killed any living being, nor let him. Approve of others killing, after having refrained from hurting all creatures, both that are strong and those that tremble in the world.

## *Mahaummagga Jataka*

A king who will not do the bidding of a wise and faithful counsellor, being bent on his own pleasure, is like a deer caught in a trap.

★ ★ ★

Wise men do not sinful deeds for the sake of the pleasure that wealth gives. Goodmen, even though struck by misfortune and brough low, neither for friendship nor for enimity will renounce the right.

## நீத்தார் பெருமை வடக்கிலும் தெற்கிலும்

தமிழ் தந்த தாதா சிறுப்பிட்டி வைரவநாதர் தாமோதரம்பிள்ளை அவர்கள் நினைவு விழா இம்முறை நல்லையாதீனத்தில் நடைபெற்றது. இது பல ஒன்றியங்களின் கூட்டுவிழாவாகப் பல்கலைக்கழகத்தினரும் கலந்த விழாவாக நடைபெற்றது. விழாவில் நாயகர் நினைவாக நூல்கள் வெளியிடப்பெற்றன.

தெற்கில் சுதந்திர தாகமுற்றவர்களும் முன்னோடிகளுள் ஒருவரும் சேனநாயக சகோதரருள் ஒருவருமான எவ். ஆர். என்னும் பெரியாரின் நினைவு விழா நன்றாக நடைபெற்றது.

## இராமாபிவிருத்திப் பணி

யாழ்ப்பாணம் சங்கானை கிழக்கு கிராமாபிவிருத்தியில் ஈடுபட்ட சங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி அவர்களுக்குப் பலவிதமான நூல்கள், வெளியீடுகள், பிரசுரங்கள் யாவும் கொடுத்ததோடு, பலவிதமான பயன்தரு, நிழல்தரு, விறகுதரு மரக்கன்றுகளையும் பெருமளவில் உபகரித்த மில்க்வைற் தொழிலதிபரை, உதவி அரசாங்க அதிபர் உள்ளிட்ட சங்க அங்கத்தவர் பாராட்டி நன்றி கூறுகின்றார்கள். இவர்கள் முன்மாதிரி பாராட்டுதற்குரியது.

★ சோம்பேறிகளுக்கு ஓய்வுநேரம் கிடையாது ★

## கிழக்குலகில் மலரும் செய்தி

கிழக்குலகமாய மலேசியாவில் மாதந்தோறும் மலரும் செய்தியொன்று, மலேசிய இந்து இளைஞர் பேரவையின் செய்தியறிக்கையாக செந்தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளி வருகிறது.

தன்னிலும் உயர்ந்த சேவை என்னும் இலட்சிய வாசகத்தோடு, ஒளிச்சக்கரத்துள் நந்தியும், அதற்குமேல் ஓங்காரமும் பொறித்த முத்திரையுடன் செய்தி மலருகிறது

மாதச்சிந்தனை என்னும் பகுதி செய்தியின் புறவிதழிலே மணங்கமழ்கின்றது. வேள்வி, தானம், தவம் முதலியன அர்த்தமுள்ளவை. வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் பயன் உள்ளவை; ஒருவன் உயிர்வாழ எத்தனையோ பேரின் உதவி தேவை; கொள்வதும் கொடுப்பதும் வாழ்வில் இன்றியமையாதவை. பகிர்ந்து கொள்வதால் சமுதாயம் முன்னேறுகிறது; பொதுமுயற்சி என்பதே வேள்வி. சுயநலமற்ற தொண்டு யாகம். பலர் சேர்ந்து செய்யும் பணி அபாரசக்தி வாய்ந்தது. கூட்டுவழிபாடு, சத்சங்கம் வலிமை வாய்ந்தவை; நாம் சமுதாய உறுப்புப்போன்ற நிலையில் சேர்ந்து வேள்வி செய்தல் வேண்டும். சேரவாரும் செகத்தீரே என்பது போன்ற அழைப்பு மணங்கமழ்கின்றது. இதில்தான் முருகன் தன் இளநலம் காட்டுவன் என்று நாம் மலேசியரை - Berita Mhyc என்னும் கூட்டத்தவரை பாராட்டி வாழ்த்துகிறோம்.

## குருபக்தி

பக்தி வகைகளுள் தலையானது குருபக்தி. மும்மலங்களுள்ள மக்களுக்கு இறைவன் குருவாக எழுந்தருளி வந்து அருள்புரிவர் என்பது சைவ வைணவ சமய நம்பிக்கை. ''குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'' என்பது அருணகிரிநாதர் அருள்வாக்கு. இறைபக்தியிலும் குருபக்தி சிறந்தது என்று பெரியோர் கூறுவர்; குருவைத் தெய்வமாகக்கொண்டு, தெய்வத்தைக் கண்டவர் பலர். குரு சீடரின் உடம்பையும் மனத்தையும் தீட்சையாலும் மந்திரோபதேசத்தாலும் சுத்திகரிக்கும் பேராற்றல் வாய்த்தவர். இறைவனின் திருவருளைச் சீடர் மேல் திசைதிருப்பி விடுதற்கான ஆற்றல் வாய்ந்தவர்; அவர் ஞானவடிவினர். அவரின் தீட்சை விசேடத்தால் சீடருக்கு ஞானம் கைவரும்.

மாணிக்கவாசக சுவாமிகளுக்குக் குரு செய்த தீட்சை, விவேகானந்தருக்கு இராமகிருஷ்ணர் செய்த தீட்சை, கபீருக்கு இராமானந்தர் செய்த தீட்சை, ஆருணிக்கு அயோத தௌமியர் செய்த தீட்சை, குருநமச்சிவாயருக்குக் குகைநமச்சிவாயர் செய்த தீட்சை சீடர்களுக்குப் பெரும் பேறுகளைக் கொடுத்தன. குரு வாய்திறவாமல் மௌனமாகச் சிந்தனை மூலம் சீடரை உருவாக்கவும் வல்லவர்.

ஏகலைவன் என்னும் வேடன் பாவனையின் உச்சகட்டத்தை அறிந்தவன்; துரோணாசாரியரின் உருவத்தை மண்ணால் செய்து, அவர் நேரிலிருந்து தனக்கு வித்தை பழக்கியதாகப் பாவனைபுரிந்து, அருச்சுனனுக்கு நிகரான வில்வித்தை நிபுணனாயினன். அவன் வித்தையைத் துரோணாசாரியரே வெகுவாக வியந்தார்.

## உங்களுக்குத் தெரியுமா? விடைகள்

1. ஜிப்றோல்ரர் குகைகள். 2. ஆறுமாதம். 3. கூடிய பால். 4. ஏழரை அடி. 5. கொறிலா. 6. டிங்கோ. 7. விரைவில் மறைந்துவிடும். 8. யானை. 9. பதினாறு மைல் 10. பதினாறு அங்குலம். 11. குதிரை. 12. கடல் நாய். 13. பைசன். 14. ஆண் 40 பெண் 36. 15. துருவமான் 16. இமயக்குகை. 17. கிறிஸ்தவசமயம். 18. பேரு. 19. பிரான்ஸ், இத்தாலி. 20. சலிக்லோ. 21. வெங்கலம். 22. இரும்பு. 23. ஆர்க்கிமீடிஸ். 24. இருபத்திரண்டு யார். 25. இரும்புக்கறள்.

## யோகி வழி

ஒருபோது யோகியே எனத் தொடங்கும் பாடல் ஒன்று யோகியானவர் ஒரு நாளில் ஒருவேளை மாத்திரம் உண்பர் என்று கூறுகிறது. யோகத்தால் உடலைத் தன் வயப்படுத்தி, ஆன்மாவை இறைவனோடு இணைப்பர். யோகந்தானும் ஹடயோகம், ராஜயோகம், கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் முதலியனவாகப் பல படிகளில் உள்ளது.

மனவொடுக்கம், ஞானவொடுக்கம், தியானம் முதலியவற்றில் விடாய்கொண்ட அமெரிக்கருக்கு நல்லமுறையில் யோகியர்க்கான சூழலை உருவாக்கிச் சித்தத்தைச் சிவன்பால் நிறுத்திப் பழகுவதற்குப் பக்குவப்படுதற்கு வாய்த்த சற்குரு ஸ்ரீ சச்சித்தானந்த சுவாமிகளாவர். சச்சிதானந்த சுவாமி இமயம் வரை புகழ்பெற்றவர். யோகக்கலை நிபுணர். உடம்பைக் காகிதத் துண்டுபோல மடிக்கவும் சுருட்டவும் யோக வழிகளை அநுட்டிப்பவர். சுவாமிகள் அமெரிக்கருக்கு யோக வாழ்க்கை பழக்குவதில் பெருவெற்றி கண்டதோடு, அமெரிக்கரின் அன்புக்கும் பாத்திரராகியுள்ளார். பத்து ஆண்டுகளுக்குமுன் அவர் அமெரிக்கர் இதயங்களில் இட்ட விதை இன்று மரமாகி வளர்ந்து புஷ்பித்துத் தேன் பிலிற்றுகிறது. இம் மலர்கள் காயாகிக் கனியாகிச் சாரம் பிலிற்றும்போது சரீரம் தன்வயமிழந்து கருவி கரணங்கள் படிப்படியாகப் படிந்து, ஆன்மா இறைவனின் பொற்பாதத்தில் ஈடு இணையில்லாத பேரின்பம் அடையும் என்று அமெரிக்கர் திடமாக நம்புகிறார்கள். யோகி சச்சிதானந்தர் வழி, அமெரிக்கருக்குப் பத்ததி போலப் பழக்கமாகி வருகிறது.

## ஆனைக்குட்டி ஆசாரி

யாழ்ப்பாணத்து மரவேலைத் திறமைக்கு எடுத்துக்காட்டாக 1614ஆம் ஆண்டளவில் வாழ்ந்து, ஐரோப்பியரின் பாராட்டைப் பெற்றவர் ஆனைக்குட்டி ஆசாரியார் என்பவராவர். போத்துக்கேய துறவியொருவர் கோவாப் பிரதேசத்திலிருந்து கொண்டு வந்த மரக்குற்றியிலிருந்து அற்புதமாதாவின் அருட்டிருவடிவத்தை அமைத்தவர் ஆனைக்குட்டி ஆசாரியாராவர். அவருடைய புகழ் கத்தோலிக்க உலகமெங்கும் பரவியிருந்த காலம் அக்காலம்.

★ அறிவற்ற துணிவினால் ஆவது ஒன்றுமில்லை ★

## கருடபார்வை

வாரும் கருடாழ்வாரே! கண்டு கனகாலம். ஓமோம். சும்மா பறந்தாற்போல் ஆபிரிக்கா கண்டத்தை மேல் வெட்டாகப் பார்த்து வருகிறேன். அங்கே ஏதாவது விடந் தீர்க்கப் போனீராக்கும். இல்லை இல்லை; நாட்டு வளம் பார்க்கப் போனேன். எப்படி? எப்படி?

ஆபிரிக்கா, அமெரிக்காவைவிட நான்கு மடங்கு பெரியது. அங்கே குள்ளர் முதல் ஆஜானுபாகுகள் வரை வாழ்கிறார்கள். அடிமைகள் முதல் அரசர்கள்வரை வாழ்கிறார்கள். அது 11262000 சதுரமைல் பரப்புள்ளது. உஷ்ணவலயம், உட்புகமுடியாத காடு. வைரக்கல், தங்கம், செம்பு, கொக்கோ, எண்ணெய், பனை எல்லாம் நிறைய உண்டு. அங்கே எந்தப் பயிரும் நன்கு விளையும். அங்கே 700 மொழிகள் வரையில் ஒலிக்கின்றன. சகாரா என்னும் பெயர் பெற்ற பாலை நிலம் சாகரம் என்னும் மணல் சமுத்திரம். ஆபிரிக்காவைச் சும்மா சுற்றிவர 16000 மைல் முன்னர் பினிஷியர், கார்த்தேஜினியர் சுற்றிப் பார்த்தார்களாம். பின்னர் கிரேக்கர், போத்துக்கேயர் சுற்றி வந்தார்களாம். பத்தலமியூடயஸ் 1488இல் சுற்றினராம். வாஸ்கோடகாம 1498இல் சுற்றினராம். அவர்கள் முற்றாகப் பிரதட்சணம் வரவில்லை. ஒல்லாந்தர், டேனியர், ஸ்பானியர், பிரெஞ்சுக்காரர், பிரித்தானியரும் கொஞ்சம் சுற்றி வளைந்தார்களாம்.

ஐரோப்பிய நாடுகள் ஆபிரிக்காவைப் பிரித்துப் பங்கு போட்டு வேலியடைக்க முயன்றார்கள். வெற்றியும் பெற்றார்கள். பிரெஞ்சுக்காரர், பிரிட்டிஷ்காரர், பெல்ஜியர், போத்துக்கேயர், ஸ்பானியர் ஆகியோரின் செல்வாக்கு அங்கே பரவியது. இத்தாலியரும் அங்கே இயன்றளவு கௌவினார்கள்.

முதல் உலக மகாயுத்தத்தில் 200000 ஆபிரிக்க வீரர்கள் பங்குபற்றினர்கள் என்பர். இரண்டாம் யுத்தத்தில் 500000 வீரர்கள் பங்குபற்றவேண்டிய நிர்ப்பந்தம் நிலவியது. தென்ஆபிரிக்காவில் ஒரு வெள்ளைக்காரன், 38 ஆபிரிக்கரை அடக்குமளவில் சிறுபான்மையினரின் ஆட்சி அங்கே நடைபெறுகிறது. அற்றிலா என்னும் அவுணன் பயங்கரவாதி ஐவன் என்னும் பழைய ரஷியன், அடோல்வ் ஹிட்லர் என்னும் ஜேமனியன் வழியில் இடிஅமின் ஆட்கொல்லியாயிருந்ததும் ஆபிரிக்காவிலேதான். முன்னர் மலேசியா சிங்கப்பூர்போல இன்று ஜாம்பியா, நைஜீரியா நம்நாட்டவர்க்குப் பொருளாதார சுபீட்சம் செய்யும் கண்டமும் ஆபிரிக்காவேதான். மிகப்பழைய நாகரிக நைல் நதிக்கரையும், முக்கோணக் கட்டடங்களும், தற்கால ஐரோப்பிய நாகரிகமும் நிறைந்த எகிப்து நாடும் ஆபிரிக்காவைச் சேர்ந்ததே. நைஜீரியா பனை வளம் நிரம்பிய தேசம். அங்கே பனங்கிழங்கு மொத்தமாயும், மாப்பிடித்துள்ளதாயும் விளைகிறது. வடக்கில் சொகட்டோ பிரதேசத்தில் கட்டைப் பனைகள் உண்டு. எங்கள் பனைச் சபையினர் ஒரு கப்பல் பனங்கொட்டை இறக்குமதி செய்து, கட்டையினத்தை விருத்தி பண்ணினால் எல்லோரும் கருப்பநீர் இறக்க வசதியாகும். ஏணியைச் சாத்திச் சுலபமாக ஏறலாம்.

முற்றொடர்:

## சைவம் மணக்கும் தமிழ் நூல்கள் சில

64. சிவசங்கர சதகம்
வீராசாமி
65. சிவசக்தி பூசை
கமலமூர்த்தி மௌனகுரு
66. சிவசமவாத உரை மறுப்பு
சிவஞான சுவாமிகள்
67. சிவசிவ வெண்பா
சேனுமலையர்
68. சிவ சைவப் பள்ளு
இராமநாதகவி
69. சிவஞானசித்தியார்
அருணந்திசிவாசாரியர்
70. சிவஞானசித்தியார் உரை
யாழ்ப்பாணம் ஞானப்பிரகாசர்
71. சிவஞானசித்தியார் உரை
மறைஞானதேசிகர்
72. சிவஞானசித்தியார் ஞானுபர்ண உரை
வெள்ளியம்பலவாணர்
73. சிவஞானசித்தியார்
திருவொற்றியூர் ஞானப்பிரகாசர்
74. சிவஞானசித்தியார் விருத்தி
சிவாக்கிரகயோகி
75. சிவஞான தீபம்
பாம்பன் குமரகுருதாசர்

## கொட்டிக் கிழங்கு

கம்பர் மகன் அம்பிகாபதி வரலாற்றில், கிழங்குக்காரி, கொட்டிக் கிழங்கோ கிழங்கு என்று கூறி வந்த வழங்கோசை வையம் பெறும் எனப் பாடிய வரலாறென்று வழங்குகிறது. கொட்டிக்கிழங்கின் பெருமதியை ஏழைகள் அறிவர்.

சீதளகாரி என வழங்கும் இக்கொட்டிக் கிழங்கைப் பத்மம் என வடமொழியிலும் மலையாளத்திலும் வழங்குவர். ஏழைகளின் உணவுதான் என்றாலும் எவரும் இதனை உண்ணலாம். உண்பதால் தேமல், பிரமேகம், உட்சூடு முதலியன நீங்கும். கிழங்கைக் காயவிட்டு இடித்து மாவாக்கிக் கஞ்சியாக்கியும் பருகுவர். கொட்டிக் கிழங்கு குளங்களில் படரும் ஒருவகைத் தாவரத்தில் உண்டாவது.

"கொட்டிக் கிழங்கு குளிர்ச்சியென்பார் தேமலுடல்
ஒட்டிநின்ற மேகம் ஒழிக்குங்காண் — வட்டமுலை
மானே அகக்கடுப்பும் வந்த அழலுந் தணிக்கும்
தானே இதையறிந்து சாற்று."

★ சுயநலம் தூய அன்பைப் பாழ்படுத்துகிறது ★

# செந்நெல்லும் செங்கரும்பும்

தமிழர் விளைவு செய்து பூரிப்படைந்த இரு பயிர்கள் நெல்லும் கரும்புமாகும். நெல்லின் விளைவு மிகுதியைப் புலவர்கள் பலவிதமாகப் புனைந்தும் பாடியுள்ளார்கள். நெற்பயிர் பெரிதாக வளர்ந்ததைப் பார்த்த புலவர் அதனை மிகைப்படுத்தி அது கரும்புபோல வளர்ந்தது என்றார். கரும்பின் வளர்ச்சி கமுகுபோலமைந்தது என்று அவர் பாடத் தயங்கவில்லை. இத்தனை வளர்ச்சிக்கும் வளத்துக்கும் காரணம் தமிழரின் முயற்சியாகும்.

நெல்லும் கரும்பும் மிகுதியாக விளைந்த பூரிப்பால் பொங்கியது பொங்கல். பொங்கலைப் பொங்க வைப்பதற்குப் பட்டி நிறையப் பசுமாடுகள் வளர்ந்தன. வாங்க (கறக்க) குடம் நிறையும் வற்றாப் பெரும் பசுக்கள் தமிழ் நாட்டில், தமிழர் மனையில், இன்றைய கலப்பினங்கள் வருமுன்பே வளர்ந்தன.

பொங்கல் வெறும் புற்கையோடு நிற்பதில்லை. அது பெருவிழா, திருவிழா, மங்கலங்கள் பொலிய மனையில் நடைபெறும் மங்களவிழா. அது பொலிவுவிழா, பூரிப்பு விழா, கோலவிழா. நெல்லரிசியும், கரும்பில் வந்த சர்க்கரையும், பசுவில் வந்த பாலும் சேர்ந்த முக்கூட்டுப் பொங்கல் மூவா மருந்து, விருந்து.

தானியங்கள் உலகமெங்கும் விளைகின்றன. நன்றாக விளைகின்றன. விவசாயிகள் மகிழ்ச்சியடைகிறார்கள். கவலையின்றி வாழ்கின்றார்கள். ஆனால் அவர்களிடம் ஒரு பண்பாடு வெளியாவதில்லை பண்பாட்டின் வழியில் பண்டிகை நடைபெறுவதில்லை. தமிழன் கண்ட தானிய விளைவு ஒரு மகிழ்ச்சிப் பண்பாட்டில், நன்றிக் கடன் செலுத்தும் நாகரிகப் பண்டிகையாக மலர்கின்றதே. அதுதான் தமிழன் தலையாய மனிதன் என்பதற்கு அறிகுறி. விளைவுக்கு உதவிய விலங்குகளுக்கும் நன்றி. அந்த முறையில் பட்டியில் பொங்கல். பசுக்களுக்கும் எருதுகளுக்கும் பூசனை வழிபாடு. இலட்சாதிபதியும் பொங்கலுக்குப் பொற்பாத்திரம் வெள்ளிப் பாத்திரம வாங்குவதில்லை. குடியானவனைப்போல, உள்ளூரில் உற்பத்தியான மண்பானை. பொங்கலுக்கு மின்சாரம், வாயு, எண்ணெய் உபயோகிப்பதில்லை. அடுப்பும் நெருப்பும். தென்னைமரத்தின் பாளை, மட்டை, சாதாரண விறகு. மண்ணுக்கு மதிப்புக் கொடுக்கும் மனித வர்க்கத்தில் தமிழன் தலைசிறந்தவன். சட்டி பானை முதலிய மட்பாண்டங்கள் இன்றும்தான் உபயோகத்தில் உள்ளன. தானியங்களைப் பதமாக்கிய சூரியனுக்கு முன்பாக அவன் உதித்துவரும் வேளையில் பொங்கல் இடும் வழக்கம் நாகரிகத்துறையில் உச்சக்கட்டமாகும்.

# மகத்தான மரவள்ளி ஒருவேளை உணவு

பொரியல், கறி அவித்தும் சுட்டும், உணவு. வற்றலாக்கி மாவிடித்துப் பிட்டு மிஞ்சினால் யந்திரம் மூலம் சவ்வரிசி. எத்தனையோவிதமான பயன்.

மரவள்ளி வரட்சியைத்தாங்கும். நீர் இறைத்து அதிக பயன் பெறலாம். களிமண்ணிலும் பயன்தரும். மணல் நிலத்திலும் பயன்தரும். அதிக மாப்பிடிப்பான விரைவில் பயன்தரும் இனங்கள் வந்துள்ளன.

ஏக்கர் ஒன்றில் குறைந்தது இரண்டு தொன் விளையும். முயன்றால் மூன்று தொன் விளையும். சந்தேகமில்லை.

இன்றைய எம். யு. 10 என்ற இனம் ஐந்து மாத காலத்தில் எட்டுத் தொன் தரும்.

## மரவள்ளி நடவா?

நன்று! நன்று!! நடுங்கள்! நடுங்கள்!!

எட்டு அங்குலத் துண்டுகளில் 4 அங்குலம் நிலத்தில் மறையச் சரித்து 3 அடி தூரத்துக்கு ஒன்றாக நடுங்கள். மொட்டுக்கள் மேல்நோக்கி நிற்றல் கவனிக்க வேண்டும். இங்ஙனம் ஐதாக நட்டுப் பயிர் செய்யும்போது பயறு, உழுந்து, கௌப்பி முதலிய தானியங்களையும் பருவம் நோக்கி விதைத்து விளைவு பெற்று நிலவளம் பெறலாம்.





உங்களுடைய
சகலவிதமான
ஆடைகளையும்
மின்வேகத்தில்
சலவைசெய்து
பளிச்சென்ற
வெண்மையைக்
கொடுப்பது

விஞ்ஞானரீதியில் தயாரானது

**மில்க்வைற் சலவைப் பவுடர்**

விசேஷமாக மாணுக்கியர் அணியும்
வெண்ணிறச் சீருடைகளை
விரைவில் அழுக்கு நீக்கித்
தூய வெண்ணிறம் பொருந்தச்
சுத்தஞ் செய்வது

**மில்க்வைற் சலவைப் பவுடர்**

பயன்படுத்துவோர் வசதிகருதிச்
சிறிய பைக்கற்றுகளிலும் எங்கும் கிடைக்கும்.

மாணவர்களே!

மேலுறைகளைக் கொடுத்து
அப்பியாசக்கொப்பி, நேரசூசி ஆகியவற்றை
இனுமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-2-84.